# Padasalai's
## Telegram Groups!

( தலைப்பிற்கு கீழே உள்ள லிங்கை கிளிக் செய்து குழுவில் இணையவும்! )

- Padasalai's NEWS - Group

https://t.me/joinchat/NIfCqVRBNj9hhV4wu6_NqA

- Padasalai's Channel - Group

https://t.me/padasalaichannel

- Lesson Plan - Group

https://t.me/joinchat/NIfCqVWwo5iL-21gpzrXLw

- 12th Standard - Group

https://t.me/Padasalai_12th

- 11th Standard - Group

https://t.me/Padasalai_11th

- 10th Standard - Group

https://t.me/Padasalai_10th

- 9th Standard - Group

https://t.me/Padasalai_9th

- 6th to 8th Standard - Group

https://t.me/Padasalai_6to8

- 1st to 5th Standard - Group

https://t.me/Padasalai_1to5

- TET - Group

https://t.me/Padasalai_TET

- PGTRB - Group

https://t.me/Padasalai_PGTRB

- TNPSC - Group

https://t.me/Padasalai_TNPSC

# காலாண்டுப் பொதுத் தேர்வு, செப்டம்பர் - 2019

-----

## வகுப்பு 12

பதிவெண் [ ][ ][ ][ ][ ][ ]

நேரம்: 2.30 மணி **PART - III - கணக்குப்பதிவியல்** மொத்த மதிப்பெண்கள்: 90

**அறிவுரைகள்:**

1. அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.
2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

### பகுதி - I

**குறிப்பு:** **20×1=20**

**i)** அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

**ii)** கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1) நிலை அறிக்கை ஒரு
   a) வருமானம் மற்றும் செலவுகள் அறிக்கை b) சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் அறிக்கை
   c) ரொக்க நடவடிக்கைகளின் தொகுப்பு d) கடன் நடவடிக்கைகளின் தொகுப்பு

2) கடன் விற்பனைத் தொகை கணக்கிட தயாரிக்கப்படுவது
   a) மொத்த கடனாளிகள் கணக்கு b) மொத்த கடனீந்தோர் கணக்கு
   c) பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு d) செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு

3) பொறுப்புகளைக் காட்டிலும் மிகுதியாக உள்ள சொத்துக்கள்
   a) நட்டம் b) ரொக்கம் c) முதல் d) இலாபம்

4) உயில் கொடை ஒரு
   a) வருவாயினச் செலவு b) முதலினச் செலவு
   c) வருவாயின வரவு d) முதலின வரவு

5) ஒரு மன்றத்தில் உள்ள 500 உறுப்பினர்கள் ஆண்டு சந்தாவாக ரூ. 100 செலுத்துகின்றனர். நடப்பாண்டில் கூடியுள்ள சந்தா இன்னமும் பெறப்படாதது ரூ. 200 முன்கூட்டிப் பெற்ற சந்தா ரூ. 300 வருவாய் மற்றும் செலவினக் கணக்கில் காட்டப்பட வேண்டிய சந்தா தொகையினைக் கண்டறியவும்.
   a) ரூ. 50,000 b) ரூ. 50,200 c) ரூ. 49,900 d) ரூ. 49,800

6) வருவாய் மற்றும் செலவினக் கணக்கு தயாரிக்கப்படுவதன் மூலம் கண்டறியப்படுவது
   a) இலாபம் அல்லது நட்டம் b) ரொக்கம் மற்றும் வங்கி இருப்பு
   c) உபரி அல்லது பற்றாக்குறை d) நிதிநிலை

7) பின்வருவனவற்றில் எது சரியற்ற இணை?
   a) எடுப்புகள் மீது வட்டி - முதல் கணக்கில் பற்று வைக்கப்பட வேண்டும்
   b) முதல் மீது வட்டி - முதல் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும்
   c) கடன் மீது வட்டி - முதல் கணக்கில் பற்று வைக்கப்பட வேண்டும்
   d) இலாபப் பகிர்வு - முதல் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும்

8) பின்வருவனவற்றில் எது இலாப நட்டப் பகிர்வு கணக்கில் காட்டப்படும்?
   a) அலுவலகச் செலவுகள் b) பணியாளர் ஊதியம்
   c) கூட்டாளியின் ஊதியம் d) வங்கிக் கடன் மீதான வட்டி

9) கூட்டாண்மை ஒப்பாவணம் இல்லாத நிலையில் நிறுவனத்தின் இலாபம் கூட்டாளிகளுக்கு இடையே பகிர்ந்தளிக்கப்படுவது
   a) சமமான விகிதத்தில் b) முதல் விகிதத்தில்
   c) இரண்டும் (அ) மற்றும் (ஆ) d) மேற்கூறிய எதுவுமில்லை

10) சராசரி இலாபம் ரூ. 25,000 மற்றும் சாதாரண இலாபம் ரூ. 15,000 ஆக இருக்கும்போது உயர் இலாபம்
   a) ரூ. 25,000 b) ரூ. 5,000 c) ரூ. 10,000 d) ரூ. 15,000


Scanned by CamScanner

11) கீழ்வருவனவற்றில் எது தவறு?
a) உயர் இலாபம் = மொத்த இலாபம் / ஆண்டுகளின் எண்ணிக்கை
b) உயர் இலாபம் = கூட்டு இலாபம் / ஆண்டுகளின் எண்ணிக்கை
c) உயர் இலாபம் = சராசரி இலாபம் – சாதாரண இலாபம்
d) உயர் இலாபம் = சராசரி இலாபம் × கொள்முதல் ஆண்டுகள்

12) பின்வரும் வாக்கியங்களில் எது சரியானது?
a) நற்பெயர் ஒரு புலனாகாச் சொத்து
b) நற்பெயர் ஒரு நடப்புச் சொத்து
c) நற்பெயர் ஒரு கற்பனைச் சொத்து
d) நற்பெயரினை வாங்க முடியாது

13) கூட்டாளி சேர்ப்பின் போது நற்பெயரானது மதிப்பீடு செய்யப்பட்டு யாருடைய முதல் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும்?
a) அனைத்து கூட்டாளிகள்
b) பழைய கூட்டாளிகள்
c) புதிய கூட்டாளி
d) தியாகம் செய்த கூட்டாளிகள்

14) பட்டியல் Iஐ மற்றும் பட்டியல் II உடன் ஒப்பீடு செய்து சரியான விடையை கீழே கொடுக்கப்பட்டுள்ள சரியான குறியீட்டை பயன்படுத்தி தெரிவு செய்யவும்.

| வ.எண் | பட்டியல் I | வ.எண் | பட்டியல் II |
|---|---|---|---|
| i) | தியாக விகிதம் | 1. | முதலீட்டு மாறுபடும் நிதி |
| ii) | பழைய இலாப பகிர்வு விகிதம் | 2. | பகிர்ந்துதரா இலாபம் |
| iii) | மறுமதிப்பீட்டு கணக்கு | 3. | நற்பெயர் |
| iv) | முதல் கணக்கு | 4. | பதிவுறா பொறுப்பு |

குறியீடுகள்:

| | (i) | (ii) | (iii) | (iv) |
|---|---|---|---|---|
| a) | 1 | 2 | 3 | 4 |
| b) | 3 | 2 | 4 | 1 |
| c) | 4 | 3 | 2 | 1 |
| d) | 3 | 1 | 4 | 2 |

15) பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்.
a) மறுமதிப்பீட்டு இலாபம்
b) பகிர்ந்தளிக்கப்படாத நட்டம்
c) புதிய கூட்டாளி கொண்டு வந்த நற்பெயர்
d) முதலீட்டு மாறுபடும் நிதி

16) விலகும் கூட்டாளிக்குரிய தீர்வுத் தொகை உடனடியாக செலுத்தாத போது அது மாற்றப்படும் கணக்கு
a) வங்கிக் கணக்கு
b) விலகும் கூட்டாளியின் முதல் கணக்கு
c) விலகும் கூட்டாளியின் கடன் கணக்கு
d) பிற கூட்டாளிகளின் முதல் கணக்கு

17) A, B மற்றும் C என்ற கூட்டாளிகள் 2:2:1 என்ற விகிதத்தில் இலாப நட்டத்தை பகிர்ந்து வந்தனர். கூட்டாளி B-யின் விலகலின்போது நிறுவனத்தின் நற்பெயர் ரூ. 30,000 என மதிப்பிடப்பட்டது. கூட்டாளி B-க்கு ஈடுசெய்வதற்கு A மற்றும் Cயின் பங்களிப்பைக் கண்டறியவும்.
a) ரூ. 20,000 மற்றும் ரூ. 10,000
b) ரூ. 8,000 மற்றும் ரூ. 4,000
c) ரூ. 10,000 மற்றும் ரூ. 20,000
d) ரூ. 15,000 மற்றும் ரூ. 15,000

18) நிறுமக் கலைப்பின் போது மட்டுமே அழைக்கப்படக்கூடிய பங்கு முதலின் ஒரு பகுதி இவ்வாறு அழைக்கப்படும்?
a) அங்கீகரிக்கப்பட்ட முதல்
b) அழைக்கப்பட்ட முதல்
c) முதலினக் காப்பு
d) காப்பு முதல்

19) பின்வரும் வாக்கியங்களில் எது சரியாகப் பொருந்தக்கூடியது?
a) சந்தா - வருவாயின வரவுகள்
b) சிறப்பு நிதி - வருவாயினச் செலவுகள்
c) விளையாட்டு உபகரணங்கள் வாங்கியது - முதலின வரவுகள்
d) மதிப்பூதியம் - முதலினச் செலவுகள்


Scanned by CamScanner

20) பட்டியல் Iஐ மற்றும் பட்டியல் II உடன் ஒப்பீடு செய்து சரியான விடையை கீழே கொடுக்கப்பட்டுள்ள சரியான குறியீட்டை பயன்படுத்தி தெரிவு செய்யவும்.

| வ.எண் | பட்டியல் I | வ.எண் | பட்டியல் II |
|---|---|---|---|
| i) | கூட்டாளிகளின் ஊதியம் | 1 | பிரிவு 13 (இ) |
| ii) | இலாப பகிர்வு விகிதம் | 2 | பிரிவு 13 (ஈ) |
| iii) | முதல் மீது வட்டி | 3 | பிரிவு 13 (ஆ) |
| iv) | கடன் மீதான வட்டி | 4 | பிரிவு 13 (அ) |

குறியீடுகள்:

| | (i) | (ii) | (iii) | (iv) |
|---|---|---|---|---|
| a) | 1 | 2 | 3 | 4 |
| b) | 4 | 3 | 1 | 2 |
| c) | 3 | 4 | 2 | 1 |
| d) | 2 | 1 | 4 | 3 |

## பகுதி - II

7×2=14

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும்.**
**அவற்றுள் வினா எண் 30க்கு கண்டிப்பாக விடையளிக்கவும்.**

21) நிலை அறிக்கை என்றால் என்ன?

22) பின்வருவனவற்றுள் மறுமதிப்பீட்டு கணக்கில் பற்று அல்லது வரவு வைக்கப்படுவதைத் தரவும்.
அ) சொத்தின் மீதான தேய்மானம் ஆ) பதிவுறா பொறுப்புகள்
இ) கொடுபட வேண்டிய செலவிற்கான ஒதுக்கீடு ஈ) சொத்தின் மீதான மதிப்பேற்றம்

23) இலாப நோக்கற்ற அமைப்பின் முதலின வரவுகளில் ஏதேனும் நான்கினைத் தரவும்.

24) கூட்டாண்மை வரைவிலக்கணம் தரவும்.

25) கூட்டாண்மை நிறுவனத்தில் நற்பெயரை மதிப்பிடும் ஏதேனும் இரண்டு சூழ்நிலைகளைத் தரவும்.

26) பின்வரும் விவரங்களில் இருந்து இலாபம் அல்லது நட்டம் கணக்கிடவும்.

| | |
|---|---|
| ஆண்டு தொடக்கத்தில் முதல் (1 ஏப்ரல், 2016) | ரூ. 2,00,000 |
| ஆண்டு இறுதியில் முதல் (31 மார்ச், 2017) | ரூ. 3,50,000 |
| அவ்வாண்டில் கொண்டு வந்த கூடுதல் முதல் | ரூ. 70,000 |
| அவ்வாண்டின் எடுப்புகள் | ரூ. 40,000 |

27) பின்வரும் விவரங்கள் வேதாரண்யம் விளையாட்டு மன்றத்தின் இறுதி கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும்.

| விவரம் | ரூ. |
|---|---|
| மட்டைகள் மற்றும் பந்துகள் தொடக்க இருப்பு | 3,000 |
| அவ்வாண்டில் வாங்கிய மட்டைகள் மற்றும் பந்துகள் | 17,000 |
| பழைய மட்டைகள் மற்றும் பந்துகள் விற்பனை | 2,000 |
| மட்டைகள் மற்றும் பந்துகள் இறுதி இருப்பு | 4,000 |

28) வெண்ணிலா மற்றும் ஈஸ்வரி இருவரும் கூட்டாளிகள். வெண்ணிலா ஒவ்வொரு அரையாண்டின் தொடக்கத்திலும் ரூ. 5,000 எடுத்துக் கொண்டார். கணக்கிடப்பட வேண்டிய எடுப்புகள் மீதான வட்டி ஆண்டுக்கு 4%. 2018, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய எடுப்புகள் மீது வட்டி, சராசரி கால முறையைப் பயன்படுத்திக் கணக்கிடவும்.

29) லதா நிறுமம் பங்கொன்று ரூ. 10 வீதம் 10,000 நேர்மைப் பங்குகளை விண்ணப்பத்தின் போது முழுத்தொகையும் செலுத்தும் வகையில் வெளியிட்டது. குறிப்பேட்டுப் பதிவுகளைத் தருக.

30) அருள் மற்றும் அனிதா என்ற கூட்டாளிகள் இலாப நட்டங்களை 4:3 என்ற விகிதத்தில் பகிர்ந்து வருகின்றனர். 31.3.2018 அன்று புதிய கூட்டாளியாக அஜய் என்பவர் சேர்த்துக் கொள்ளப்பட்டார். சேர்க்கையின் போது, நிறுவன ஏடுகளில் பொதுக்காப்பு ரூ. 42,000 எனக் காட்டியது. பொதுக்காப்பினை பகிர்ந்தளிப்பதற்கான குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும்.

Send Your Answer Keys, Questions, Study Materials To Our Email Id - padasalai.net@gmail.com
Scanned by CamScanner

## பகுதி - III

எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். 7×3=21

அவற்றுள் வினா எண் 40க்கு கண்டிப்பாக விடையளிக்கவும்.

31) பின்வரும் தகவல்களில் இருந்து கடன் விற்பனையைக் காணவும்.

| விவரம் | ரூ. |
|---|---|
| 2018, ஏப்ரல் 1 அன்று கடனாளிகள் | 1,00,000 |
| கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | 2,30,000 |
| அளித்த தள்ளுபடி | 5,000 |
| உள்திருப்பம் | 25,000 |
| 2019, மார்ச் 31 அன்று கடனாளிகள் | 1,20,000 |

32) கூட்டாண்மை ஒப்பாவணத்தின் உள்ளடக்கங்கள் ஏதேனும் ஆறினைத் தரவும்.

33) பின்வரும் விவரங்கள் ஒரு மன்றத்தின் 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும்.

**2019 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்குரிய**
**பெறுதல்கள் செலுத்தல்கள் கணக்கு**

| ப | | | | வ |
|---|---|---|---|---|
| **பெறுதல்கள்** | **ரூ.** | **ரூ.** | **செலுத்தல்கள்** | **ரூ.** |
| சந்தா: | | | | |
| 2017-2018 | 10,000 | | | |
| 2018-2019 | 50,000 | | | |
| 2019-2020 | 5,000 | 65,000 | | |

மன்றத்தில் உள்ள 200 உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் ஆண்டு சந்தாவாக ரூ. 400 செலுத்துகின்றனர். 2017-2018 ஆம் ஆண்டில் இன்னும் பெற வேண்டிய சந்தா ரூ. 2,000.

34) காரைக்குடி விளையாட்டு மன்றத்தின் 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய இறுதிக்கணக்குகளில் பின்வருவன எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும்.

| விவரம் | ரூ. |
|---|---|
| 2018, ஏப்ரல் 1 அன்று தொடர் விளையாட்டுப் போட்டி நிதி | 90,000 |
| 2018, ஏப்ரல் 1 அன்று தொடர் விளையாட்டுப் போட்டி நிதி முதலீடு | 90,000 |
| தொடர் விளையாட்டுப் போட்டி நிதி முதலீடு மீதான வட்டி பெற்றது | 9,000 |
| தொடர் விளையாட்டுப் போட்டி நிதிக்கான நன்கொடை | 10,000 |
| தொடர் விளையாட்டுப் போட்டி செலவுகள் | 60,000 |

35) கவிதா என்பவர் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளி. அவர் வழக்கமாக ஒவ்வொரு மாதமும் ரூ. 2,500 எடுத்துக் கொள்கிறார். எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 4% கணக்கிடப்பட வேண்டும். எடுப்புகள் மீது வட்டி சராசரி கால முறையைப் பயன்படுத்தி கீழ்க்கண்ட சூழ்நிலைகளில் கணக்கிடவும்.
அவர் (அ) ஒவ்வொரு மாத தொடக்கத்தில் எடுத்திருந்தால்
(ஆ) ஒவ்வொரு மாத இடையில் எடுத்திருந்தால் (இ) ஒவ்வொரு மாத இறுதியில் எடுத்திருந்தால்

36) பின்வரும் விவரங்களில் இருந்து, கடந்த 4 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 3 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

| ஆண்டு | முடிவு | தொகை (ரூ.) |
|---|---|---|
| 2015 | இலாபம் | 5,000 |
| 2016 | இலாபம் | 8,000 |
| 2017 | நட்டம் | 3,000 |
| 2018 | இலாபம் | 6,000 |

37) வினோத், கார்த்தி மற்றும் பிரணவ் என்ற கூட்டாளிகள் 2:2:1 என்ற விகிதத்தில் இலாபம் மற்றும் நட்டங்களை பகிர்ந்து வந்தனர். 2018, ஏப்ரல் 1 அன்று பிரணவ் என்பவர் கூட்டாண்மையில் இருந்து விலகின்றார். அவருடைய விலகலின் போது கீழ்க்கண்ட சரிக்கட்டுதல்கள் செய்யப்பட வேண்டும்.
அ) நிலம் மற்றும் கட்டிடத்தின் மதிப்பை ரூ. 18,000 அதிகரிக்க வேண்டும்.
ஆ) இயந்திரத்தின் மதிப்பை ரூ. 15,000 குறைக்க வேண்டும்.
இ) கொடுபட வேண்டிய செலவுகளுக்கு ரூ. 8,000 ஒதுக்கு உருவாக்க வேண்டும்.
குறிப்பேட்டுப் பதிவுகள் தந்து மறுமதிப்பீட்டுக் கணக்கினைத் தயாரிக்கவும்.

Scanned by CamScanner

38) அகமது மற்றும் பஷீர் வழங்கிய முதல் முறையே ரூ. 60,000 மற்றும் ரூ. 40,000. அவர்களின் இலாபப் பகிர்வு விகிதம் 2:1. அவ்வாண்டின் முதல் மீது வட்டி கணக்கிடுவதற்கு முன் இலாபம் ரூ. 5,000. பின்வரும் நிலைகளில் முதல் மீதான வட்டித் தொகையைக் கணக்கிடவும்.

அ) முதல் மீது வட்டி குறித்து கூட்டாண்மை ஒப்பாவணத்தில் ஏதும் குறிப்பிடாத போது

ஆ) கூட்டாண்மை ஒப்பாவணத்தின்படி முதல் மீது வட்டி ஆண்டுக்கு 4% அனுமதிக்கப்படும்போது

இ) கூட்டாண்மை ஒப்பாவணத்தின்படி முதல் வட்டி ஆண்டுக்கு 6% அனுமதிக்கப்படும்போது

39) அனு நிறுமத்தால் ரூ. 10 முக மதிப்பில் வெளியிடப்பட்ட நேர்மைப் பங்குகளில், தியாகு என்பவர் வைத்திருந்த 200 நேர்மைப்பங்குகளுக்கு இறுதி அழைப்புத் தொகைக்கான ரூ. 3 செலுத்தாத காரணத்தால் அவை ஒறுப்பிழப்பு செய்யப்பட்டன. அப்பங்குகள் ரூ. 6 வீதம் லக்ஷ்மனுக்கு மறுவெளியீடு செய்யப்பட்டன. ஒறுப்பிழப்பு மற்றும் மறுவெளியீட்டிற்கான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

40) அன்பு என்பவர் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளி. கூட்டாண்மை ஒப்பாவணத்தின்படி எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 12% கணக்கிடப்படுகிறது. 2018, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டில் அவருடைய எடுப்புகள் பின்வருமாறு.

| நாள் | ரூ. |
|---|---|
| மார்ச் 1 | 6,000 |
| ஜுன் 1 | 4,000 |
| செப்டம்பர் 1 | 5,000 |
| டிசம்பர் 1 | 2,000 |

பெருக்குத்தொகை முறையைப் பயன்படுத்தி எடுப்புகள் மீது வட்டி கணக்கிடவும்.

## பகுதி - IV

7×5=35

குறிப்பு: அனைத்து கேள்விகளுக்கும் விடையளிக்கவும்.

41) a) 2017, ஏப்ரல் 1 அன்று கணேஷ் ரூ. 75,000 முதலுடன் தன்னுடைய தொழிலைத் தொடங்கினார். அவர் முறையான கணக்கேடுகளை பராமரிக்கவில்லை. 31.03.2018 ஆம் நாளைய அவருடைய ஏடுகளின் விவரங்கள் பின்வருமாறு:

| விவரம் | ரூ. | விவரம் | ரூ. |
|---|---|---|---|
| ரொக்கம் | 5,000 | கடனாளிகள் | 16,000 |
| சரக்கிருப்பு | 18,000 | கடனீந்தோர் | 9,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 7,000 | வங்கி ரொக்கம் | 24,000 |
| அறைகலன் | 3,000 | செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 6,000 |
| நிலம் மற்றும் கட்டடங்கள் | 30,000 | | |

அவ்வாண்டில் தன்னுடைய சொந்தப் பயனுக்காக அவர் ரூ. 15,000 எடுத்துக் கொண்டார். அவ்வாண்டில் அவர் கொண்டு வந்த கூடுதல் முதல் ரூ. 20,000. அவருடைய இலாபம் அல்லது நட்டத்தைக் கண்டறியவும்.

(அல்லது)

b) அமல் மற்றும் விமல் இருவரும் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளிகள். அவர்கள் 7:5 என்ற விகிதத்தில் இலாபங்கள் மற்றும் நட்டங்களை பகிர்ந்து வந்தனர். 2019 மார்ச் 31 அன்றைய அவர்களின் இருப்புநிலைக்குறிப்பு பின்வருமாறு.

| பொறுப்புகள் | | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|---|
| முதல் கணக்குகள்: | | | நிலம் | 80,000 |
| அமல் : | 70,000 | | அறைகலன் | 20,000 |
| விமல் : | 50,000 | 1,20,000 | சரக்கிருப்பு | 25,000 |
| பற்பல கடனீந்தோர் | | 30,000 | கடனாளிகள் | 30,000 |
| இலாப நட்ட கணக்கு | | 24,000 | வங்கி | 19,000 |
| | | 1,74,000 | | 1,74,000 |

1-4-2019ல் நிர்மல் புதிய கூட்டாளியாக சேருகிறார். அவர் ரூ. 30,000 முதலுடன் எதிர்கால இலாபப்பங்கில் 1/3 விகிதத்தில், பின்வரும் சரிகட்டலுடன் கூட்டாளியாகிறார்.

அ) சரக்கிருப்பின் மதிப்பு ரூ. 5,000 குறைக்கப்பட வேண்டும்.

ஆ) வாராஐயக்கடன் ஒதுக்கு ரூ. 3,000 உருவாக்கப்பட வேண்டும்.

இ) கட்டடம் ரூ. 20,000 மதிப்பேற்றம் செய்யப்பட வேண்டும்.


Scanned by CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com



மறுமதிப்பீட்டுக் கணக்கு மற்றும் கூட்டாளி சேர்க்கைக்கு பின்பான கூட்டாளி முதல் கணக்கு தயார் செய்யவும்.

42) a) பின்வரும் விவரங்களில் இருந்து மொத்த விற்பனையைக் கணக்கிடவும்.

| விவரம் | ரூ. | விவரம் | ரூ. |
|---|---|---|---|
| 2018, ஏப்ரல் 1 அன்று கடனாளிகள் | 2,50,000 | பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு மறுக்கப்பட்டது | 15,000 |
| 2018, ஏப்ரல் 1 அன்று பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 60,000 | உள்திருப்பம் | 50,000 |
| கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | 7,25,000 | 2019, மார்ச் 31 அன்று பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 90,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டுக்காக ரொக்கம் பெற்றது | 1,60,000 | 2019, மார்ச் 31 அன்று பற்பல கடனாளிகள் | 2,40,000 |
| வாராக்கடன் | 30,000 | ரொக்க விற்பனை | 3,15,000 |

(அல்லது)

b) கூட்டாண்மை அடிப்படையில் நடத்தப்படும் ஒரு வணிகத்தின் விவரங்கள் பின்வருமாறு.

அ) ஈட்டிய இலாபங்கள்: 2016: ரூ. 30,000; 2017: ரூ. 29,000, 2018: ரூ. 32,000.

ஆ) 2016 ஆம் ஆண்டின் இலாபத்தில் திரும்ப திரும்ப நிகழா வருமானம் ரூ. 3,000 சேர்ந்துள்ளது.

இ) சரக்கிருப்பு தீயினால் சேதமடைந்ததால் 2017 ஆம் ஆண்டின் இலாபத்தில் ரூ. 2,000 குறைக்கப்பட்டது.

ஈ) சரக்கிருப்பு காப்பீடு செய்யப்படவில்லை. ஆனால் எதிர்காலத்தில் காப்பீடு செய்வதென முடிவு செய்யப்பட்டது. அதற்கான காப்பீட்டு கட்டணம் ஆண்டுக்கு ரூ. 5,600 என மதிப்பிடப்பட்டது.

3 ஆண்டுசராசரி இலாபத்தில் 2 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

43) a) திருச்சி கல்வியியல் மன்றத்தின் கீழ்ககாணும் தகவல்களில் இருந்து 2018 டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கினைத் தயார் செய்யவும்.

| விவரம் | ரூ. | விவரம் | ரூ. |
|---|---|---|---|
| தொடக்க ரொக்க இருப்பு (1.1.2018) | 20,000 | பாதுகாப்பு பெட்டக வாடகை பெற்றது | 12,000 |
| முதலீடுகள் செய்தது | 80,000 | அறைகலன் விற்றது | 5,000 |
| மதிப்பூதியம் செலுத்தியது | 3,000 | பொதுச்செலவுகள் | 7,000 |
| நன்கொடை பெற்றது | 80,000 | அஞ்சல் செலவுகள் | 1,000 |
| தணிக்கைக் கட்டணம் செலுத்தியது | 2,000 | சந்தா பெற்றது | 10,000 |

(அல்லது)

b) கௌதம் வரையறு நிறுமம், இராகவ் அவர்களின் ரூ. 10 மதிப்பிலான 500 நேர்மை பங்குகளின் இறுதி அழைப்பு ரூ. 2 செலுத்தாத காரணத்தினால் ஒறுப்பிழப்பு செய்தது. ஒறுப்பிழப்பு செய்யப்பட்ட பங்குகள், மதன் என்பவருக்கு பங்கு ஒன்று ரூ. 8 வீதம் மறுவெளியீடு செய்யப்பட்டது. ஒறுப்பிழப்பு மற்றும் மறுவெளியீட்டிற்கான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

44) a) பின்வரும் தகவல்களில் இருந்து, மன்னன் மற்றும் சேவகன் எனும் கூட்டாளிகளின் முதல் கணக்குகளை அவர்களின் முதல் மாறுபடும் முதலாக இருக்கும் போது தயாரிக்கவும்.

| விவரம் | மன்னன் (ரூ.) | சேவகன் (ரூ.) |
|---|---|---|
| 2018 ஜனவரி 1 அன்று முதல் (வரவு இருப்பு) | 2,00,000 | 1,75,000 |
| 2018 ஆம் ஆண்டின் எடுப்புகள் | 40,000 | 35,000 |
| எடுப்புகள் மீதான வட்டி | 1,000 | 500 |
| 2018 ஆம் ஆண்டின் இலாபப்பங்கு | 21,000 | 16,500 |
| முதல் மீது வட்டி | 12,000 | 10,500 |
| ஊதியம் | 18,000 | -- |
| கழிவு | -- | 2,500 |

(அல்லது)

Send Your Answer Keys, Questions, Study Materials To Our Email Id - padasalai.net@gmail.com
Scanned by CamScanner

b) தினேஷ் மற்றும் சுகுமார், 2018 ஜனவரி 1 அன்று கூட்டாண்மை ஒப்பந்தத்தில் ஈடுபட்டனர். தினேஷ் ரூ. 1,50,000 மற்றும் சுகுமார் ரூ. 1,20,000 முதலாக கொண்டு வந்தனர். ஒப்பந்தம் பின்வருவனவற்றைக் கொண்டுள்ளது.

அ) தினேஷ் மற்றும் சுகுமார் இலாப நட்டங்களை 2:1 என்ற விகிதத்தில் பகிர வேண்டும்.

ஆ) கூட்டாளிகளுக்கு முதல் மீது வட்டி ஆண்டுக்கு 4% தரப்பட வேண்டும்.

இ) எடுப்புகள் மீதான வட்டி கணக்கிடப்பட வேண்டியது தினேஷ் ரூ. 3,600 மற்றும் சுகுமார் ரூ. 2,200.

d) தினேஷிற்கு சம்பளம் ஆண்டுக்கு ரூ. 60,000 வழங்கப்பட வேண்டும் மற்றும்

e) சுகுமாருக்கு தரப்பட வேண்டிய கழிவு ரூ. 80,000.

2018 டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டில் வட்டி, சம்பளம் மற்றும் கழிவு போன்றவற்றை சரிகட்டுவதற்கு முன் நிறுவனம் ஈட்டிய இலாபம் ரூ. 2,20,000. இலாப நட்டப் பகிர்வு கணக்கைத் தயாரிக்கவும்.

45) a) ஆகாஷ், பாலா, சந்துரு மற்றும் டேனியல் ஆகியோர் ஒரு நிறுவனத்தின் கூட்டாளிகள். கூட்டாண்மை ஒப்பாவணம் இல்லாதபோது பின்வருவனவற்றை எவ்வாறு மேற்கொள்வீர்கள்?

அ) ஆகாஷ் என்பவர் அதிக முதல் வழங்கியுள்ளார். அவர் முதல் மீது வட்டி ஆண்டுக்கு 10% கோருகிறார்.

ஆ) பாலா ஒவ்வொரு மாதமும் ரூ. 3,000 எடுத்துக் கொள்கிறார். ஏனைய கூட்டாளிகள் பாலாவிடம் ஆண்டுக்கு 8% எடுப்புகள் மீது வட்டி நிறுவனத்திற்கு அளிக்குமாறு கேட்கிறார்கள். ஆனால் பாலா அதை ஒப்புக்கொள்ளவில்லை.

இ) ஆகாஷ் இலாபத்தினை முதல் விகிதத்தில் பகிர்ந்தளிக்க வேண்டும் என்கிறார். ஆனால் பிற கூட்டாளிகள் அதனை ஒப்புக்கொள்ளவில்லை.

ஈ) டேனியல் தனது முழு நேரத்தையும் தொழிலில் செலவிடுவதால் அவர் ஒவ்வொரு மாதமும் ரூ. 10,000 ஊதியம் வேண்டும் என்று கோருகிறார்.

உ) சந்துருவால் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட கடன் ரூ. 50,000. அவர் கடன் மீது வட்டி ஆண்டுக்கு 12% வேண்டும் என்று கோருகிறார்.

(அல்லது)

b) பின்வரும் விவரங்களில் இருந்து மொத்தக் கொள்முதலைக் கணக்கிடவும்.

| விவரம் | ரூ. | விவரம் | ரூ. |
|---|---|---|---|
| 2018 ஜனவரி 1 அன்று பற்பல கடனீந்தோர் | 30,000 | கொள்முதல் திருப்பம் | 15,000 |
| 2018 ஜனவரி 1 அன்று செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 25,000 | ரொக்க கொள்முதல் | 2,25,000 |
| கடனீந்தோருக்கு ரொக்கம் செலுத்தியது | 1,20,000 | 31.12.2018 அன்று கடனீந்தோர் | 25,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டுக்குக் செலுத்தியது | 30,000 | 31.12.2018 அன்று செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 20,000 |

46) a) மணி, ரமா மற்றும் தேவன் ஆகியோர் ஒரு நிறுவனத்தின் கூட்டாளிகள். தங்கள் இலாப நட்டங்களை முறையே 5:3:3 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். அவர்களின் 2019 மார்ச் 31 ஆம் நாளைய இருப்புநிலைக்குறிப்பு பின்வருமாறு.

| பொறுப்புகள் | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|
| முதல் கணக்கு: | | கட்டடம் | 80,000 |
| மணி : 50,000 | | சரக்கிருப்பு | 20,000 |
| ரமா : 50,000 | | அறைகலன் | 70,000 |
| தேவன் : 50,000 | 1,50,000 | கடனாளிகள் | 20,000 |
| பற்பல கடனீந்தோர் | 20,000 | கைரொக்கம் | 10,000 |
| இலாப நட்டக் கணக்கு | 30,000 | | |
| | 2,00,000 | | 2,00,000 |

பின்வரும் சரிகட்டுதல்களுக்குட்பட்டு மணி 31.3.2019 அன்று கூட்டாண்மையிலிருந்து விலகுகிறார்.

Scanned by CamScanner

அ) சரக்கிருப்பில் ரூ. 5,000 மதிப்பு குறைக்கப்பட வேண்டும்.

ஆ) வாராஐயக்கடனுக்கு ரூ. 1,000 ஒதுக்கு உருவாக்க வேண்டும்.

இ) கட்டடத்தின் மதிப்பு ரூ. 16,000 அதிகரிக்கப்பட வேண்டும்.

ஈ) மணிக்குச் சேர வேண்டிய தொகை உடனடியாகச் செலுத்தப்படவில்லை.

மறுமதிப்பீட்டுக் கணக்கு மற்றும் கூட்டாளி விலகலுக்குப்பின் உள்ள முதல் கணக்கினைத் தயாரிக்கவும்.

(அல்லது)

b) டேவிட் முறையான கணக்கேடுகளைப் பராமரிக்கவில்லை. அவருடைய ஏடுகளில் இருந்து தரப்பட்டுள்ள விவரங்கள் பின்வருமாறு.

| விவரம் | 1-4-2018 | 31-3-2019 |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| ரொக்கம் | 43,000 | 29,000 |
| சரக்கிருப்பு | 1,20,000 | 1,30,000 |
| பற்பல கடனாளிகள் | 84,000 | 1,10,000 |
| பற்பல கடனீந்தோர் | 1,05,000 | 1,02,000 |
| கடன் | 25,000 | 20,000 |
| வணிக வளாகம் | 2,50,000 | 2,50,000 |
| அறைகலன் | 33,000 | 45,000 |

அவ்வாண்டில் அவர் கூடுதல் முதலாக ரூ. 45,000 கொண்டு வந்தார். தன்னுடைய வியாபாரத்திலிருந்து சொந்தப் பயனுக்காக ரூ. 2,500 ஒவ்வொரு மாதமும் எடுத்துக் கொண்டார். மேற்கண்ட விவரங்களைக் கொண்டு இலாப நட்ட அறிக்கையை தயார் செய்யவும்.

47) a) ஜாய் நிறுமம் ரூ. 10 மதிப்புள்ள 10,000 நேர்மை பங்குகளை விண்ணப்பத்தின் போது ரூ. 5, ஒதுக்கீட்டின் போது ரூ. 3, முதல் மற்றும் இறுதி அழைப்பின் போது ரூ. 2 செலுத்தும் வகையில் வெளியிட்டது. 9,000 பங்குகளை வாங்க பொதுமக்கள் விண்ணப்பித்தனர். இயக்குனர்கள் 9,000 பங்குகளையும் ஒதுக்கீடு செய்து அதற்கான தொகையையும் பெற்றுக் கொண்டனர். தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

(அல்லது)

b) சென்னை விளையாட்டு மன்றத்தின் கீழ்க்காணும் தகவல்களில் இருந்து 2018, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கினை தயார் செய்யவும்.

| விவரம் | ரூ. | விவரம் | | ரூ. |
|---|---|---|---|---|
| தொடக்க ரொக்க இருப்பு (1-4-2017) | 10,000 | சந்தா பெற்றது | | |
| | | 2016-2017 | 4,500 | |
| தொடக்க வங்கி இருப்பு (1-4-2017) | 15,000 | 2017-2018 | 65,000 | |
| | | 2018-2019 | 5,000 | 74,500 |
| வட்டி செலுத்தியது | 5,000 | தொடர் விளையாட்டுப் போட்டிச் செலவுகள் | | 12,500 |
| தொலைபேசி செலவுகள் | 7,000 | | | |
| மைதானம் பராமரித்தது | 22,500 | தொடர் விளையாட்டுப் போட்டி நிதி வரவுகள் | | 15,000 |
| ஆயுள் உறுப்பினர் கட்டணம் பெற்றது | 5,500 | இறுதி ரொக்க இருப்பு (31.08.2018) | | 5,000 |
| மட்டைகள் மற்றும் பந்துகள் வாங்கியது | 13,000 | | | |

@@@@@@

Send Your Answer Keys, Questions, Study Materials To Our Email Id - padasalai.net@gmail.com

Scanned by CamScanner